DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **STC1418/2022** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : திரு. வள்ளி மணவாளன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 24.06.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 24th **June** 2026.

**எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கங்கைகொண்டான் காவல்நிலையத்தல் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.05.2021ம் தேதி இரவு 20.00 மணிக்கு பனவடலிசத்திரம் காவல்நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது மேலநீலிதநல்லூர் கிராம நிர்வாக அலுவரான திருமதி. பூங்குடி என்பவர் காவல்நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.85/2022

ச/பி.143, 341, 283IPC இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். பின்னர் அதன் அசல் மற்றும் புகார் மனுவை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் ஒரு நகலை விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் அவர்களின் பார்வைக்கும் வைத்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது** இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவம் நடந்த அன்று காலை 8.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை காவல் நிலையத்தில் இருந்தேன். மதியம் உணவு இடைவெளிக்கு மட்டும் சென்று வந்தேன். புகார் கொடுத்த கிராம நிர்வாக அதிகாரி காலை 11.30 மணிக்கு சம்பவம் நடந்து இரவு 8.00 மணிக்கு புகார் கொடுத்ததற்கு தணிப்பட்ட காரணம் எதுவும் குறினார்களா என்றால் இல்லை. சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு 15–20 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் கிராம நிர்வாக அதிகாரி புகார் கொடுத்தபின்பு தான் தெரியும் என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில், அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனு கொடுத்ததாக சொல்லப்படுவது, அதை பெற்று நீங்கள் வழக்கு பதிவு செய்ததாக சொல்வதுவும் உண்மை அல்ல என் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.